1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 89 பேர் வாரியத்தால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 1977-78 ஆம் ஆண்டு முடிய கிட்டத்தட்ட ரூ. 1,03,000 மதிப்புள்ள தேனை உற்பத்தி செய்கின்ற பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் பல்வேறு பணிகளிலே இயற்கையாக அவர்களை ஈடுபடுத்த முடியாது. ஆனால், கதர் விற்பனையின் பொழுது அவர்களது பணி சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது என்பது தான் உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரத்தில் மருத்துவமனைக் கட்டிடம்.

* வினா எண். 57—திரு. அ. ப. பழனியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், பழனி தாலுகாவில் உள்ள ஒட்டன்சத்திரத்தில் ஒரு பொது ஆஸ்பத்திரி (General Hospital) கட்ட 1970-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், ஆஸ்பத்திரி கட்ட நடப்பு ஆண்டில் நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

மருத்துவக் கல்லூரிகள்.

*வினா எண். 58—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் மருத்துவக் கல்லூரிகள், அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகள் முறையே எத்தனை?

(ஆ) அரசு கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ந்தெடுப்பதைப் போலவே தனியார் கல்லூரிகளில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

(இ) இல்லை என்றால் அதற்கான காரணம் யாது?

(ஈ) தனியார் கல்லூரிகளுக்கு மான்யம் ஏதேனும் கொடுக்கப்படுகிறதா? எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் :

(அ) தனியார் நடத்தும் மருத்துவக் கல்லூரி—ஒன்று
அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகள்—எட்டு.

(ஆ) இல்லை.

(இ) அரசுக் கல்லூரிகளைப்போல தனியார் கல்லூரியிலும் தேர்வை கடைப்பிடிக்க வேண்டுமென அவசியமில்லை.

(ஈ) தனியார் நடத்தும் ஒரே மருத்துவக் கல்லூரியான வேலூரிலுள்ள சி.எம்.சி. மருத்துவக் கல்லூரிக்கு இவ்வரசு மான்யம் ஏதும் வழங்குவதில்லை.

[முற்பகல் 10·20]

திரு. வி.கே. கோதண்டராமன் : சார், அரசினர் மருத்துவக் கல்லூரிகளில் எப்படி மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ அது போன்று தனியார் கல்லூரிகளில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்போது எதற்காக தனியாரிடத்திலே அந்தக் கல்லூரி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பிரியம் போல, சாதி அடிப்படையில், மத அடிப்படையில் சொந்தக்காரர்களைத் தேர்ந்தெடுத்து, குறிப்பிட்ட மதம் மட்டுமே முன்னேறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவா மத்திய சர்க்கார் அங்கீகாரம் கொடுத்துள்ளது. அதைப் பின்பற்றி நமது அரசும் அதை ஆதரிக்கிறது. அந்த அடிப்படையிலே இனிமேலாவது அரசு கல்லூரிகளிலே தேர்ந்தெடுப்பதைப்போன்று, தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தனியார் நடத்தும் ஒரே கல்லூரியான சி.எம்.சி. மருத்துவக் கல்லூரியில் நேர்முகத் தேர்வினைக் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதைப்பற்றி வலியுறுத்தவும் முடியாது. இந்தக் கல்லூரிக்கு அரசு எந்தவிதமான மானியமும் வழங்குவதில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, டிரீட்மெண்ட், இப்போது (*) ஆஸ்பத்திரியாக இருக்கிறது.....

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது, கேள்வி வடிவில் அந்த நிறுவனத்தைக் குறித்து உண்மைக்கு மாறான பல கருத்துக்களை இங்கே நீங்கள் அனுமதிப்பது முறைதானா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோதண்டராமன் தங்களுடைய வேகத்தை சொற்களிலே அடக்கமாகச் சொல் லுங்கள். அவர்கள் சொன்ன * என்ற வார்த்தைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அங்கே எல்லோரும் போகிறோம் அதற்காகத்தான் உண்மையைச் சொன்னேன், அதை நிருபிக்கத் தயார். மிஸ்டர் ஜேம்ஸ் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால். ஆகவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அரசின் மருத்துவக் கல்லூரிகளிலே கம்யூனிடி அடிப்படையிலே அரிசனங்களுக்கு இத்தனை சதவிகிதம் பின்தங்கிய மக்களுக்கு இத்தனை சதவிகிதம், மற்றவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று தேர்ந்தெடுக்கப்படுகின்ற அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற்புறுத்து வதற்கு இந்த அரசு ஏன் தயங்க வேண்டும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அரசின் சார்பில் எந்தவிதமான மானியமும் வழங் கப்படாத காரணத்தால், சிறுபான்மை சமுதாயத்தினரால் நடத்தப்படுகின்ற கல்லூரி என்ற காரணத்தினாலும் வற்புறுத்து வதற்கு வழியில்லை.

போளூர் வட்டத்தில் கால்நடை மருத்துவமனைகள்.

*வினா எண். 59—திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் கால்நடை மருத்துவமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் எத்தனை மருத்துவமனைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்விலுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் ஆறு கால்நடை மருந்தகங்கள் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் செயல்படுகின்றன :—

(1) கலசப்பாக்கம் (2) ஆதமங்கலம்	கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்.
(3) போளூர் (4) கேளூர் (5) களம்பூர்	போளூர் ஊராட்சி ஒன்றியம்.
(6) சேத்துப்பட்டு	சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.